# நம்மாழ்வாரும் திருவேங்கடமுடையானும்

**ஸ்ரீ.உ.வே. டாக்டர் மா. வரதராஜன்,** M.A., M.A., Ph.D.,

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ஸ்ரீமந் நாதமுனிகள் தொடக்கமான பூர்வாசாரியர்கள் வைஷ்ணவத்தை உரைகள், உபன்யாசங்கள் மற்றும் காலக்ஷேபங்கள் மூலமாகப் பரப்பி வந்துள்ளனர். 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிறந்து விளங்கிய வித்வான்களில் வைகுண்டவாசியான ஸ்ரீமதுபயவே, காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி தன்னிகரற்ற வித்வானாகத் திகழ்ந்தவராவர். உபயவேதாந்த வித்யா நிதியாய் சாந்தமே வடிவெடுத்த இந்த ஸ்வாமியின் உபன்யாஸங்கள் - அளப்பரிய ஆரமுதாயிருக்கும். அறியாக்காலத்தே அடியேன் பலகால் கண்டு களித்த இந்த ஸ்வாமியின் தோற்றப்பொலிவு அடியேனுடைய உள்ளத்தின்கண் உருவெளிப்பாடாய்த் தோன்றி உறைந்தருள்கிறது.

இந்த ஸ்வாமியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னைப் பல்கலைக்கழக வைணவத்துறை நடத்தும் கருத்தரங்கில் அடியேனையும் 'நம்மாழ்வாரும் திருவேங்கட முடையானும்' என்ற தலைப்பில் பேச அழைத்ததற்கு என் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

ப்ரபந்நஜநகூடஸ்தரான நம்மாழ்வார் அருளிய நான்கு பிரபந்தங்களுள் சரம பிரபந்தமான திருவாய்மொழியானது தொண்டர்க்கு அமுதமாயும், எல்லா மக்களையும் ஆனந்திப்பிக்கச் செய்வதாயும், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகை புருஷார்த்தங்களைக் கொடுக்கவல்லதாய், ஆயிரக்கணக்கான கிளைகளையுடைய உபநிஷத்துக்களின் திரட்சியானதாய் இருக்கும் என்பர். இது பற்றியே மதுரகவிகள், 'வேதத்தின் உட்பொருள் நிற்கப்பாடினான்' என்றும், ஸ்ரீமந்நாதமுனிகள், 'வேதம் தமிழ் செய்த மாறன்' என்றும் போற்றி உரைப்பர். வேதம் தமிழ் செய்கையாவது வேத சாரமாகத் திகழும் ஐந்து அர்த்தங்களான இறைநிலை, உயிர்நிலை, தக்க நெறி, தடை, பேறு ஆகியவற்றைத் தமிழ்ப் பாக்களாலே விளக்கிக்காட்டியதாகும். வேதத்தின் உட்பொருளாவது वेदैश्च सर्वै: अहमेव वेद्य: (வேதைச்ச ஸர்வை: அஹமேவ வேத்ய:) என்று கண்ணன் கூறியபடியே 'எல்லா வேதங்களாலும் அறியப்படுபவன் நானே' என்றும், 'வேதப்பொருளே வேங்கடவா' என்றும், 'வேதாந்த விழுப்பொருள்' என்று பெரியாழ்வாரும் சொல்லியபடியே எல்லா வேதங்களும் எம்பெருமானது ஸ்வரூபம், வடிவு, குணங்கள், செல்வங்கள் ஆகியவற்றை ஒரு மிடறாக ஆழ்வார் பாடினார் என்று உரைப்பர் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார். இவ்வாறு கூறியதற்கு ஏற்ப நம்மாழ்வார் தாம் அருளிய பிரபந்தங்களில் வேதத்தால் அறியப்படுபவனான திருவேங்கடவன் உறையும் திருவேங்கடத்தையே வாய் பிதற்றி, அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை அவன் காட்டத் தன் மனத்தே கண்டு, அவனுக்கே அடிமை செய்ய ஆசைப்பட்டு, அவனிடமே சரணாகதி செய்கிறார்.

மேலும், திருவேங்கடவன் வாழும் திருமலையைப் பற்றி பழமையான ருக் வேதமானது 'अरायि काणे विकटे गिरिं गच्छ सतान्वे, सिरिम्भिटस्य सत्वाभि: तेपिश्वा चादयामसि' (அராயி காணே விகடே கிரிம் கச்ச ஸதாந்வே, சிரிம்பிடஸ்ய ஸத்த்வபி: தேபிஷ்ட்வா சாதயாமஸி) என்று ஓதுகிறது. இதன்பொருளாவது - "நீ (ஜீவாத்மா) இவ்வுலகச் செல்வமும், சுவர்க்கம் முதலான மேலுலகச்செல்வமும் இல்லாதவனாயிருந்தால், நீ வெளிக்கண்ணோ உட்கண்ணோ

இல்லாதவனாயிருந்தால், நீ உடலினால் உண்டாகும் சுரம் முதலான ஆத்யாத்மிகம், மனிதன், விலங்கு முதலானவற்றால் உண்டாகும் துன்பமான ஆதிபௌதிகம், இடி, மின்னல், வெப்பம் முதலானவற்றால் உண்டாகும் துன்பமான ஆதிதைவிகம் ஆகிய மூன்று தாபங்களை அடைந்திருந்தால், நீ முற்கூறிய புருஷார்த்தங்களைப் பெற முடியாமல் தடுக்கும் பகைவரைப் பெற்றிருந்தால், திருமகளுக்குத் திருமார்பினால் பீடமாகிய ஸ்ரீநிவாசனுடைய திருமலையைக் குறித்து அவனது பக்தர்களோடு சென்று சேர்ந்து அவர்கள் மூலமாக நீ மலையப்பனை வேண்டிக்கொள்ளத் தகுதி பெற்றிருக்கிறாய் என்பதாகும். இதனால் திருமலையையும், மலையப்பனையும், அவனுடைய பக்தர்களை முன்னிட்டு அடைய வேண்டிய நிலையையும் தெளிவாக வேதபுருஷன் ஜீவாத்மாவுக்கு உபதேசித்ததைக் காணலாம்.

பெரும்பாலும் எல்லாப்புராணங்களிலும் ஸ்ரீயப்பதியான ஸர்வேச்வரன் மிக உயர்ந்த பரமபதத்தை விட்டு திருவேங்கடத்திலுள்ள ஸ்வாமி புஷ்கரிணிக்கரையில் மகாலக்ஷ்மியுடன் மகிழ்ந்துறைகின்றான் என்று சொல்லப்பட்டுள்ளது. குறிப்பாக, சேஷ தர்மபுராணத்தில் (48-13)(, मायावी परमानन्दं वैकुण्टमुत्तमम् । स्वामि पुष्करिणीतीरे रमया सह मोदते ॥ (மாயாவி பரமாநந்தம் த்யக்த்வா வைகுண்டமுத்தமம், ஸ்வாமிபுஷ்கரிணீதீரே ரமயா ஸஹ மோததே) என்கிறபடியே தனது தயை முதலான குணங்கள் விலை செல்லாமையால் வைகுண்டத்தில் வெறுப்படைந்து திருமால், அவை விலை செல்லும் இடமான மண்ணுலகில் ஸ்வாமி புஷ்கரிணிக்கரையில் பிராட்டியோடு கூட மிகவும் விருப்பத்துடன் விளையாடிக்கொண்டிருக்கிறான் என்று கூறப்பட்டுள்ளது.

திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரானில், 'விண்ணவர் கோன் விரையார் பொழில் வேங்கடவன்' என்பதற்குச்சேர பரமபதத்திலிருந்து மதுரையில் தங்கித் திருவாய்ப்பாடிக்கு வந்தாப்போலே, வைகுண்டத்திலிருந்து திருமலையில் தங்கிக்காணும் கோயிலுக்கு வந்தது என்று பட்டர் அருளியதும் காண்க.

இவ்வாறு பரமபதத்திலிருந்து முதன்முதலாகத் தங்கிய இடம் திருவேங்கடமாதலாலும், நம்மாழ்வார்க்குக் குல தெய்வம் திருவேங்கடமுடையானாதலாலும் அவனிடம் அளவிலாபக்தி பூண்டார் எனலாம்.

அந்த வகையில் திருவிருத்தத்தில் (8) நம்மாழ்வார் பராங்குச நாயகியாக 'பாண்குன்ற நாடர்' என்று வண்டுகள் பாடா நின்றுள்ள திருமலையைத் தேசமாக உடையவர் என்றும், குறிஞ்சி நிலத்தலைமகன் என்றும் திருவேங்கடவனைக் குறிப்பிட்டு, அவன் இருக்கும் அந்தத் திருவேங்கடத்தில் அவனையே பொருளாக-அழியாத பொருளாகப்பெற நித்ய சூரிகள் விரும்புகின்றனர் என்பதற்குச்சேர, 'தண் மாமலை வேங்கடத்தும்பர் நம்பும் சேண்குன்றம்' என்று பாடுகிறார். மேலும், திருவேங்கடவனிடம் அன்பின் மிகுதியால் மேகத்தைத் தூதாக விடுகிறாள் பராங்குச நாயகி. அதற்கு ஏற்ப, 'அம்பொன் மாமணிகள் திசைமின் மிளிரும் திருவேங்கடத்து வன்தாள் சிமயம் மிசை மிண்மிளிரிய போவான் வழிக்கொண்ட மேகங்களே' (30) என்கிறபடியே அழகிய பொன்னும் உயர்ந்த மணிகளும் திக்குகளில் மின்னல் போல ஒளிவீசுகின்ற வலிய தாழ்வரையையுடைய திருவேங்கடம் என்கிற மலையைக் குறித்துச் செல்லும் மேகங்கள் தன் தலையின் மேல் திரிய வேணும் என்று வேண்டுகிறாள்.

பராங்குச நாயகியானவள் தன் நாயகனான திருவேங்கடவனையல்லது தன் சரீரத்தைக் காப்பதில் பொறுமையற்றவளாய் திருமலைக்குப்போக, அங்கு அவனைக் காணாமையால் வருந்தினதைக் கேட்டான் தேரில் வரும் திருவேங்கடவன். தன் பாகனைப் பார்த்து, 'விரைந்து நண்ணுதல் வேண்டும் வலவ! தேன் நவின்ற விண்மூதல் நாயகன் நீண்முடி வெண்முத்த வாசிகைத்தாய் மண் முதல் சேர்வுற்று அருவிசெய்யாநிற்கும் மாமலைக்கே' (தி. 50) என்று தேரை விரைவாக நடத்தச் சொல்லுகிறான். நாயகி தன் நிறத்தின் வேறுபாட்டாலே நம்மைப் பழியிடுவதற்கு முன்பாகத் தேரைச் செலுத்தச் சொல்லுகிறான். அந்தத் திருமலையானது எத்தகையதெனில் - பிரிந்த நாளின் சிரமம் தீரும்படி இருக்கும் தேசமாம். வைகுந்த நாதனுடைய முடியுண்டு திருவபிஷேகம். அதில் வெண்முத்து உண்டு வெளுத்த முத்து. அதின் ஒழுங்கு போலே இந்த பூமியில் திருமலை அடியில் வந்து சேரும்படி அருவி ஓடும் என்று அநுபவிப்பர்கள் ஆசார்யர்கள்.

இப்படி திருவேங்கடவனிடம் ஈடுபட்ட பராங்குச நாயகியானவள் நாயகன் கண்டு மயங்கும்படியான கொங்கைகளின் அடையாளங்களும் இல்லாதவள்; மயிரும் கண்டை முடிக்கும்படி வளராதவள்; புடவை உடுத்த அறியாத பருவம்; தாய்தந்தையர்கள் கற்பிக்கும் வார்த்தைகளை குழறாமல் நேரே வளமாகச் சொல்லத் தெரியாதவள்; இத்தகு பேதைப்பருவத்திலும் 'திருவேங்கடம் திருவேங்கடம்' என்று சொல்லுவாள். இதுபற்றியே செவிலித்தாய் 'திருவேங்கடம் என்று கற்கின்ற வாசகமே' (60) என்று வாய் பிதற்றுவதாகச் சொல்லுவாள். இது இவளுக்கு பகவத் விஷயத்தில் உண்டான ஆசையால் தூண்டுதல் என்று உரைப்பர் நம்பிள்ளை.

இவ்வாறு அறியாக்காலத்தே அடிமை செய்ய எண்ணிய ஆழ்வார் திருமலையையும், திருப்பாற்கடலையும், வைகுந்தத்தையும் விட்டு நிறங்கரியனாய் தன்னுள் புகுந்து நீங்காதவனாய் இருப்பது பற்றி 'அடியேனது உள்ளத்தகம்' (பெரிய திருவந்தாதி 68) என்று உரைப்பர்

யஜுர் வேதம் (4 கா.3 ப்), चक्षुर्देवानामुमर्त्यानाम् (சக்ஷுர் தேவாநாமுமர்த்யாநாம்) என்கிறபடியே எம்பெருமானை விண்ணோர்க்கும் மண்ணோர்க்கும் கண் போன்ற நிர்வாஹகன் என்கிறது. அவனே திருமலையில் திருவேங்கடவனாக இருக்கிறான் என்பதைத் தெரிவிக்கும் வகையில், 'கண்ணாவானென்றும் மண்ணோர் விண்ணோர்க்கு தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பனே' (1.8.3) என்று ஆழ்வார் பாசுரமிடுகிறார். இதற்கு உரையிட்ட நஞ்சீயர், பத்த முக்த கோடித்வயத்தோடும் ஸம்ச்லேஷிக்கைக்கு ஈடாகத் திருமலையில் வந்து நின்றருளினார்' என்பர். இவ்விடத்தில் 'மண்ணோர் விண்ணோர்க்கு' என்றது. ஈச்வரன் நினைவாலே என்றும், 'விண்ணோர் வெற்பனே' என்றது நித்ய சூரிகள் நினைவு என்றும் உரைப்பர் பெரிய வாச்சான்பிள்ளை. இப்பாசுரத்தை உட்கொண்டே 'ஒடும்புள்' (1.8) என்ற இந்த பதிகள் 'ஸர்வேச்வரனுடைய ஐச்வர்யம் சொல்லுகிறது' என்பர். ஐச்வர்யமாவது, 'கண்ணாவானென்றும் மண்ணோர் விண்ணோர்க்கு' என்பதாகும். இதுபற்றியே 'நாதன் ஞாலம்கொள் பாதன் என்னம்மான்' (1.8.10) என்ற பாசுரத்தில் 'என்னம்மான்' என்பதற்கு ஆழ்வாருக்குக் கிட்டலாம்படி திருமலையில் வந்து ஆழ்வாரை அடிமை கொண்டவன் என்று 'கண்ணாவான்' பாசுரத்தை உட்கொண்டு ஆழ்வார்

உள்ளத்தை வெளிக்காட்டுகிறார் நம்பிள்ளை. இதனால் மற்ற எந்த அர்ச்சாவதார எம்பெருமானைப்பற்றி இப்பதிகத்தில் இல்லை என்பது அறியற்பாலதாகும்.

மேலும், திருவேங்கடவன் திருத்துழாய்மாலை அணிந்திருக்கிறானாம். இது பற்றியே, 'தண் வேங்கடம் மேகின்றாய் தண் துழாய் விரைநாறு கண்ணியனே' (2.6.10) என்று பாசுரமிடுகிறார். இதற்கு நம் பிள்ளையும் பெரியவாச்சான்பிள்ளையும் அழகாக உரையிடுவர். பரிமளம் மிக்கிருப்பதாய் பிடித்து மோந்த-பரிமளம் மிகுதியால் மோந்து கொண்டு இலைத்தொடைமாலையும் (பூப்பந்து) தானுமாகி நிற்கிறான் திருவேங்கடவன் என்று உரை செய்தனர். தோளில் இட்ட மாலை தோள் மாலை தோமாலை ஆயிற்று. அது பரிமளம் மிக்கிருப்பதால் அதனைமோந்து கொண்டு இருப்பதாக அனுபவித்துக் கூறுவர். இதனால், திருவேங்கடவன் தோமாலை சேவை இன்றும் சிறப்பு வாய்ந்தது. இப்படி தோளில் மாலை இட்டவனை, 'எந்தாய் தண் திருவேங்கடத்துள் நின்றாய்' (2.6.9) என்று தனக்கு வகுத்த ஸ்வாமியான முறையை அறிவித்தவன் என்கிறார் ஆழ்வார். இவ்விடத்தில் 'ச்ரமஹரமான (தாபத்தைப் போக்குவதான) திருமலையில் வந்து நின்று உன் ஸ்வாமித்வத்தைக் காட்டி என்னை சேஷத்வத்திலே (அடிமையிலே) நிறுத்தினவனே!' என்று நம்பிள்ளை ஈடுபட்டு உரைப்பர்.

இவ்வாறு அடிமையிலே நிறுத்தின திருவேங்கடவன் ஆழ்வாருக்கு எல்லாவிதத்திலும் உதவியாளனானாம். இது பற்றியே 'எற்பரன் என்னை ஆக்கிக்கொண்டு எனக்கே தன்னைத்தந்த கற்பகம் என் அமுதம் கார்முகில் போலும் வேங்கட நல் வெற்பன்' (2.7.11) என்று ஆழ்வாரையல்லது அறியாதவனானான் என்கிறார். ஆழ்வார் பக்கலிலே ஊன்றினவனாய், அதடியாக ஆழ்வாரை உண்டாக்கி, ஏற்று, ஆழ்வாருக்கே உரித்தாம்படி தன்னையே (திருவேங்கடவன்) தந்த கற்பகமாய், ஆழ்வாருக்கு இனிமையாய், தரம் பாராமல் உதவி செய்யும் காளமேகத்துக்கு ஒப்பானவனாய், அதற்குத் தகுதியான திருவேங்கடம் என்று பேரான திருமலையில் நிலையாக இருக்கிறான் என்று நயம்பட உரைப்பர் வாதிகேசரி சீயர். இந்த வள்ளல் தன்மைக்குக் காரணம் திருமலையின் ஸம்பந்தம் என்பர் நம் பிள்ளை. கற்பகத்துக்கும் திருவேங்கடவனுக்கும் உள்ள வேறுபாட்டை அழகாக எடுத்துரைப்பர் சீயர். அதாவது, எம்பெருமான் யாசிப்பவனை உண்டாக்குகிறான்; அவனையே ஏற்றுக்கொள்கிறான்; அவன் விரும்பியதைக் கொடுப்பது மட்டுமின்றி தன்னையே கொடுக்கிறான்; தன்னை அநுபவிப்பதைத்தானே கொடுக்கிறான் என்றவாறு.

இப்படி தன்னையே அநுபவிக்கக் கொடுத்த எம்பெருமான் ஆழ்வாருக்குத்தான் திருமாலிருஞ்சோலையில் அழகராக எழுந்தருளியிருக்கும் அழகை அநுபவிக்கச் செய்கிறான். ஆழ்வாரால் அவ்வநுபவத்தை முழுமையாக அநுபவிக்க முடியவில்லை. மிகுதியாகத் தாகமுடையவன் ஏலக்காய் முதலானவற்றோடு குளிர்ந்த தண்ணீர் கிட்டியிருக்க, முகம்வாய் வியாதியால் மூடப்பட்டு துடிப்பது போல, அழகரும் கிட்டியிருந்து தாகமும் மிக்கிருக்க, அளவிடற்கரிய விஷயமாகையாலே தம்மால் அளவிட்டு அநுபவிக்க முடியவில்லை என்று ஆழ்வார் துடிக்கிறார். இவ்விடத்தில் ஆழ்வாருடைய தாகத்தின் எல்லையை அரும்பதவுரைகாரர் முன்பு நடந்த நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார். அதாவது மணவாளமாமுனிகளின்

திருப்பேரனார் ஜீயர் நாயனார் ஆழ்வார் காரியமாகத் திருவரங்கம் கோயிலுக்குச் சென்றார். அங்கு காலை முதற்கொண்டு மாலை மறைவதற்குள் எழு ஞாயிறு படு ஞாயிறு என்ற நோய் வந்ததாம். அதனால் தீர்த்தம் தாகம் எடுத்து பல்கட்டி வாய் திறக்கப்போகாமல் என் வயிற்றைப்பீறி தீர்த்தம் வார்ப்பார் இல்லையே என்று துடித்தாராம். இதனால் ஆழ்வாரின் பெரிய விடாய் சொல்லப்பட்டதாயிற்று.

இப்படி விடாய்த்த ஆழ்வாருக்கு எம்பெருமான் வடக்குத் திருமலையில் நிற்பதைக் காட்டி, அங்கு வந்து அனுபவிக்கச் சொன்னான். அதனைத் தலைக்கட்டுகிறார்' முந்நீர் ஞாலம்'(3.2) என்ற பதிகத்தில். இதில் 'கலைப்பல் ஞானத்தென் கண்ணனைக் கண்டு கொண்டு நிலை பெற்று என் நெஞ்சம் பெற்றது நீடுயிரே' (3.2.10) என்பதற்குச்சேர தம் துக்கம் எல்லாம் தீர ஆத்மா நித்யமாம்படி சாஸ்திரம் ஒன்றினாலேயே அறியப்படுபவனான எம்பெருமானைத் திருமலையில் கண்ணாலே காணப்பெற்றேன் என்கிறார். இப்பதிக அவதாரிகைக்குச் சேர பிள்ளானும், நஞ்சியரும் கண்ணன் என்ற சொல்லுக்கு திருமலை எம்பெருமானையே குறிப்பிடுவது காணலாம். இதனால் மற்ற எந்த அர்ச்சாவதார எம்பெருமானைப் பற்றி இப்பதிகத்தில் இல்லை என்பது அறியற்பாலதாகும். இது பற்றியே, 'நித்யவஸ்து நீடு பெற்று' (ஆ.இ. 221) என்று அழகியமணவாளப்பெருமாள் நாயனார் அருளுவர்.

அடுத்து, அடிமைத்தன்மைக்குத் தடையான உடற்பிறவியைப் போக்க வேண்டுகிறார் ஆழ்வார். இதற்கு ஏற்ப திருவேங்கடவன் தான் திருமலையில் நிற்கும் நிலையைக் காட்டினான். இந்நிலையைக் கண்ட ஆழ்வார் அப்பெருமானிடம் 'ஒழிவில் காலமெல்லாம்' (3.3) என்ற பதிகத்தில் வாசிக கைங்கர்யம் செய்ய பாரிக்கிறார். இவ்விடத்தில் பசி இருக்குமவன் கையில் உணவுமிருந்து நீரும் நிழலுமுள்ள இடத்தைக் கண்டால் உண்ண முற்படுவது போல ஆழ்வார் நிலை அமைந்ததாக நம்பிள்ளை உரைப்பர்.

திருமலையில் நிற்கிற நிலையை மனத்தே கண்ட ஆழ்வார் திருவேங்கடவனுக்கு 'எழில் கொள் சோதி' (3.3.1) என்ற பெயரைச் சூட்டுகிறார். அதாவது அழகானதும் ஒளியுடையதுமான திருமேனியையுடையவன் என்றபடி. மேலும், திருவேங்கடவனின் மார்பில் 'அகலகில்லேன் இறையும்' என்று பிராட்டி அழகுடன் வீற்றிருக்கும் இருப்பைக் கூட்டி 'எழில் கொள் சோதி' என்றதாகக் கூறுவர் வாதிகேசரி சீயர். பரமபதத்தில் இருக்கும் சோதியானது பகலில் விளக்கு வைத்தாற் போலிருக்கும்; திருப்பாற்கடலில் இருக்கும் சோதியானது கடலே கொள்ளை கொண்டு கிடக்கும்; மற்றவர்கள் பார்க்க முடியாது. ஆனால் வேங்கடத்து எழில் கொள் சோதியோ 'வேங்கடம் மேய விளக்கு' என்கிறபடியே குன்றின் மேலிட்ட விளக்காயிருக்கும் என்று அனுபவிப்பர் நம்பிள்ளை. இப்படி விளக்காய் இருப்பவன் எல்லாரைக் காட்டிலும் உயர்ந்த தலைவனுமாவான். இது பற்றியே சுவேதாச்வதர உபநிஷத், तमीश्वराणां परमं महेश्वरं तं देवतानां परमं च दैवतम् । (தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம் தம் தேவதானாம் பரமம் ச தைவதம்) (6.7) என்று ஓதுகிறது. அதாவது ஈச்வரர்களுக்கும் மேலான மகாஈச்வரனும், தேவதைகளுக் கெல்லாம் மேலான பரதேவதையும் எம்பெருமான் என்றபடி. ஆழ்வாரும் 'எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கும் முந்தை (3.3.2) என்று அருளுகிறார். 'எந்தை' என்பதனால் தானும் தந்தையுமாய் என்று சொல்லி, மற்ற ஐந்துமாக ஏழுதலை முறைக்கும் தலைவனான எம்பெருமானைச் சொல்லுகிறார். ஒருவனுடைய உண்மை நிலையைச் சொல்லும்போது 'அடியார் அடியார்' என்று

அடிமைத் தன்மைக்குக் கீழ் எல்லையில்லாதபடி சொல்லுமாபோலே தலைவனாம் தன்மைக்குத் தம்மோடு தம் தந்தை முதலானோர் தொடக்கமாக ஏழு தலைமுறையைக் காட்டுகிறார். மேல் சொன்ன உபநிஷத்தின்படி எல்லாரைக் காட்டிலும் உயர்ந்த தலைவனான திருவேங்கடவனிடம் 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும்' (3.3.1) என்கிறபடியே ஒழிவில்லாத காலமெல்லாம் எல்லா இடத்தும் இருந்து எல்லா நிலைமையிலும் பிரியாது நின்று ஒன்றும் குறையாதபடி எல்லா அடிமைகளையும் செய்ய பாரிக்கிறார் ஆழ்வார்.

எல்லாரைக் காட்டிலும் உயர்ந்து தலைவனின் குணத்தை அனுபவிக்கும்போது 'அந்தமில் புகழ்' என்று உரைப்பர். அதாவது முடிவில்லாத குணப்பெருமையையுடையவன் என்றபடி. திருமலையில் இருப்பால் இக்குணப்பெருமைக்கு முடிவேயில்லையாம். குணப்பெருமைக்கு இருப்பிடமான திருமலையோ பரமபதத்திலிருக்கும் நித்யசூரிகளும் தங்கள் தலைவனான சேனை முதலியாரோடு கூடி நின்று தூவின விடு பூக்கள் இம்மலையின் தொடுதலாலே மலரும் தன்மையதாய்த்தனவாம். இவ்வாறு குணத்தாலும், அழகாலும் உயர்ந்தவனாய் இருப்பது பற்றி திருவேங்கடவன் காரெழில் அண்ணலானான்.

அடுத்து, திருவேங்கடவன் திருமேனியே தலைவன் இவன் என்று தோன்றும்படி உள்ளதாம். அதற்கேற்ப குணம், செல்வம் ஆகியவற்றோடு கூடியவனுமாவான். அவனது அழகான தாமரை போன்ற கண்களோ இச்செல்வங்களைக் குறிப்பிடுவதாக உள்ளனவாம். இது பற்றியே, 'அணி கொள் செந்தாமரைக் கண்ணன்' (3.3.3) என்கிறார். திருவேங்கடவனது பவளவாயோ சிவந்த கனி போன்றது. தாமரை போன்ற கண்களின் பார்வையில் மயங்கியவரை தெளிவிக்க உறுப்பாக அமைந்தது இப்பவளவாய். குலசேகரப்பெருமாளும் திருமலையில் படியாய்க் கிடந்து பவளவாய் காண ஆசைப்பட்டது நினைதற்பாலதாகும். இப்படி அவயவ அழகில் ஈடுபட்டாரை அநுபவிக்கைக்கு உறுப்பாக நீலமணிபோலே ஒளியான பளபளப்பான திருமேனியையுடையவன் மலையப்பன். அவன் இருக்கும் இடமோ தெண்ணிறச்சுனை நீரையுடைய திருமலை. அதாவது அவன் திருமேனி நிறம் போலே தெளிந்து பளபளப்பான நிறத்தையுடைய சுனை நீரையுடையது திருமலை என்று 'தெண் நிறச்சுனை' என்ற பாடம் கொண்டு அனுபவிப்பர் வாதிகேசரி சீயர்.

இப்படிப்பட்ட எம்பெருமான் அடியவர்க்கும் நித்யசூரிகளுக்கும் தம் அநுபவத்தைக்கொடுத்து நிற்கும் ஏற்றமுடைய தலைவனானது பற்றி 'எண்ணில் தொல்புகழ் வானவர் ஈசன்' (3.3.3) என்கிறார். இவ்வாறு நித்யசூரிகள் சேவிக்கும் பெருமையுடையவன் ஆழ்வாரிடம் பாசம் வைத்ததை எண்ணி 'நீசனேன் நிறைஒன்றுமிலேன் என்கண்பாசம் வைத்த பரஞ்சுடர் சோதி' (3.3.4) என்று மனம் உருகுகிறார். பிராட்டியோடு கூடியுள்ளது பற்றி எழில்கொள் சோதியான்ன். அவன் அந்தமில் புகழால் காரெழில் அண்ணலானான். இப்படி குணத்தாலும் அழகாலும் பெருமை பெற்றவன் நித்யசூரிகளுக்கு ஈசனானான். வானவரீசனானவன் ஆழ்வாரிடத்து எல்லையற்ற பாசத்தை வைத்தது பற்றி பரஞ்சுடர் சோதியானான். அறப்பெரியவன் அறத்தாழ்ந்தவனோடு புரையறக்கலக்கும் தன்மை இங்கு நிறம் பெற்றபடி. அவனது திருமேனி அழகை, தைத்திரீயோபநிஷத் नीलतोयदमध्यस्था विद्युल्लेखेव भास्वरा (நீலதோயத மத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா) (தை.ப. 11) என்று ஓதுகிறது. அதாவது எம்பெருமான் கறுத்த

மேகத்தின் நடுவிலுள்ள மின்னல் கொடி போல் ஒளியுடன் கூடியிருக்கிறான் என்றபடி. இது பற்றியே ஆழ்வாரும் 'சோதியாகி எல்லா உலகும்தொழும் ஆதி மூர்த்தி' (3.3.5) என்கிற பாசுரத்தில் எல்லையற்ற ஒளிமயமான திருமேனியுடையவனைச் சோதி என்கிறார்.

ஆழ்வாரிடம் பாசம் வைத்த பரஞ்சுடர்சோதியே எல்லா உலகமக்களும் தொழும்படி ஆதிமூர்த்தியானான். ஆதி மூர்த்தியாவது காரணபூதனான ஸர்வேச்வரன். காரணபூதனாகை யாலே எல்லா உலகும் தொழும்படி இருக்கிறானாம். எம்பெருமான் எல்லாவற்றுக்கும் காரணமாவான் என்பதற்குச்சேர தைத்திரீய உபநிஷத் यतोवा इमानि भूतानि जायन्ते । येन जातानि जीवन्ति । यत्प्रयन्त्यभिसं विशन्ति । तत्विजिज्ञासस्व । तद् ब्रह्मेति । (யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி, யத்ப்ரயந்த்யபிஸம் விசந்தி, தத் விஜிஞ்ஞாஸஸ்வ, தத்ப்ரஹ்மேதி) (ப.1.2) என்று ஓதுகிறது. இக்காரண வாக்யத்தின்படி 'எல்லா உலகும் தொழும்' என்றும், कारणंन्तु ध्येयस्सवैश्वर्यं सम्पन्नः । सर्वेश्वरः शम्भुराकाशमध्ये । (காரணம் து த்யேய: ஸர்வைச்வர்ய ஸம்பந்த: ஸர்வேச்வர: சம்புராகாசமத்யே) என்று அதர்வசிகோபநிஷத் (2.17) கூறிய படியே அடையப்படவேண்டிய வஸ்துவான ஜகத்காரண வஸ்துவை 'ஆதிமூர்த்தி' என்றும் கூறுவர் நம்பிள்ளை. அம்மூர்த்தியோ தீதில் சீர் நிரம்பப்பெற்றவன். தீதில் சீர்மையாவது கானமும் வானரமும் மற்றும் தாழ்ந்தவர்களான வேடர்களும் அனுபவிப்பதாகும். இது பற்றியே '*தீதில் சீர்த் திருவேங்கடத்தான்*' (3.3.5) என்கிறார். இப்படி தாழ்ந்தாரை மட்டுமா அநுபவிக்கிறான். அவன் வேதியர் முழுவேதத்து அமுதனுமாவான். அதாவது வைதிகர்கள் ஓதும் வேதங்களில் आनन्दो ब्रह्म (ஆனந்தோ ப்ரஹ்ம) என்றும், रसो वै सः (ரஸோ வை ஸ:) என்றும் சொல்லும்படி மிகுதியான அமுதமாயிருப்பவன்.

இவனை அடையும் நெறி தான் என்னென்னில் 'வேங்கடங்கள் மெய்ம்மேல் வினை முற்றவும்...அது சுமந்தார்கட்கே' (3.3.6) என்கிறார் ஆழ்வார். யஜுர் வேதம் பிராமணன் பிறக்கும்போது ருஷிகள், தேவர்கள், பித்ருக்கள் ஆகியோர்க்கு கடன்பட்டவனாய் இருக்கிறான் என்று ஓதுகிறது. இந்த கடன்கள் வேங்கடத்துறைவார்க்கு நமவென்னலாம் கடமை என்று சொல்லுவதால் தீர்க்கப்பட்டனவாகவே ஆய்விடும் என்பர். அதாவது நான் எனக்கு உரியேனல்லேன், எம்பெருமானுக்கே உரியேனாவேன் என்ற நினைவுடன் செயல்படுதலாகும். இவ்வாறு செயல்பட்டால் கைங்கர்யத்துக்குத் தடையான பாபங்களும் மேல் செய்யப்போகும் பாபங்களும் போகும். இப்பாசுரத்தில் 'வேங்கடங்கள் மெய்ம்மேல் வினை முற்றவும்' என்பதற்கு வேதாந்த கட்டளையில் இராமாநுசர் பொருளாட்சி அமைத்துள்ளார். கடங்கள் என்பதற்கு பூர்வபாபங்கள் என்றபடி. பாபங்களானவை பூர்வாகங்கள், உத்தராகங்கள் என்று இருவகைப்படும் எம்பெருமானைப் பற்றுவதற்கு முன் பத்தி பூர்வகமாகச் செய்யும் பாபங்கள் பூர்வாகங்கள் என்றும், பின்னர் இவ்வுலகில் கர்மத்துக்கு வசப்பட்டு ப்ராமாதிகமாக வரும் பாபங்கள் உத்தராகங்கள் என்றும் சொல்லப்படுகின்றன. இவை தீர்க்கப்படுவதை, तदधिगम उत्तर पूर्वाघयोः अश्लेष विनाशे तद्व्यपदेशात् । (தததிகம உத்தர பூர்வாகயோரச்லேஷ விநாசௌ தத்வ்யபதேசாத்) (ப்.சூ. 4.1.13) காட்டுகிறது. அதாவது எம்பெருமானை உபாசித்த பின்பு வரப்போகும் பாபங்களின் ஒட்டாமையும் முன்பே செய்த பாபங்களின் அழிவும் விளைகின்றன. ஆக, எம்பெருமானார் பொருளாட்சியின்படி 'கடங்கள்' என்பதனால் பூர்வாகங்களையும், 'மேல்வினை' என்பதனால் உத்தராகங்களையும் சொன்னபடி. இவை இரண்டும் முற்றவம் 'வேம்'

என்கையால் பூர்வாகத்துக்கு அழிவையும் உத்தராகத்துக்கு ஒட்டற்றமையையும் சொன்னபடி. 'கடங்கள் மெய்ம்மேல் வினை முற்றவும் வேம்' என்று கொண்டு கூட்டி உரைத்து 'மெய்' என்பதனால் இது சத்தியம் என்றபடி.

இப்படி அவனை அடைவதில் எல்லை நிலமாக அவன் நின்ற திருமலையே வீடு பேற்றைத் தரும் என்கிறார். அத்திருமலையானது நித்யசூரிகள் தங்கள் தலைவனான சேனை முதலியாரோடு உயர்ந்த புஷ்பங்கள், நீர், தூபம், தீபம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு வணக்கத்தோடு வேறு பயனை விரும்பாது அவனையே தொழுவர். இது பற்றியே 'சுமந்து மாமலர் நீர் சுடர் தூபங்கொண்டு அமர்ந்து வானவர் வானவர் கோனொடும் நமன்று எழும் திருவேங்கடம்' என்று போற்றியுரைப்பர். இவ்விடத்தில் ब्रह्मवेद ब्रह्मैव भवति, निरञ्जन: परमं साम्यमुपैति என்று முண்டகோபநிஷத்தில் (3.1.3) சொல்லியபடியே எம்பெருமானுக்கு அடியவனான இனிமையால் வந்த அவனோடு மேல் எல்லையான ஒற்றுமையாகிய - வீடு பேறு அடைவிக்கும் என்பர் நம்பிள்ளை

இந்த எம்பெருமான் உறையும் திருமலையை 'வைத்த நாள் முதல் எல்லை குறுகிச்சென்று எய்த்து இளைப்பதன் முன்னம் அடைமினோ' (3.3.10) என்று தங்கள் முடிவுக்கு நாளிட்டதற்கு முன்பாகவும், அவயவங்களுக்கு சக்தி குறைவதற்கு முன்பாகவும் அதன் காரணமான நெஞ்சு தளர்ந்து போவதற்கு முன்பாகவும் திருமலையை அடையவேண்டும் என்கிறார் ஆழ்வார்.

இவ்வாறு ஒழிவில் காலத்தில் ஆழ்வார் வேண்டியபடியே அடிமை கொள்கைக்காக எம்பெருமான் தன்னுடைய ஸர்வாத்மபாவத்தை - எல்லாமாம் தன்மையைக் காட்டக்கண்டு எல்லா சொற்களாலும் அடுத்த பதிகமான 'புகழும் நல் ஒருவனில்' (3.4) சொல்லி வாசிக கைங்கர்யம் பண்ணுகிறார். இப்பதிகத்தின் ஆறாயிரப்படி அவதாரிகையில் மட்டும் திருவேங்கடமுடையான் தான் ஸர்வாத்மபாவத்தைக் காட்டினான் என்று வெளிப்படையாக திருக்குருகைப்பிரான்பிள்ளான் அருளுவர். இது பற்றியே மணவாளமாமுனிகள் திருவாய்மொழி நூற்றந்தாதியில் அருளிய 'புகழொன்றுமால்...எங்கும் அடிமை செய்ய... மொய்ம்பால்' என்ற பாசுரத்தில் 'எங்கும் அடிமை செய்ய.... மொய்ம்பால்' என்ற பாசுரத்தில் 'எங்கும் அடிமை செய்ய இச்சித்து' என்பதற்குச்சேர எல்லாத்தேசத்திலும் எல்லாக்காலத்திலும் எல்லா நிலைமையிலும் திருவேங்கடமுடையான் திருவடிகளில் அடிமை செய்ய இச்சித்து அங்கு அடிமை செய்தான் என்று பிள்ளைலோகம் சீயர் உரை வழங்குவர்.

அந்த வகையில் திருவேங்கடவன் ஆழ்வாருக்கு தன் ஸ்வரூப, ரூப, குண, விபூதிகளைக் காட்டிக்கொடுத்தான். எம்பெருமானுக்கு ஞானம், ஆனந்தம், குற்றங்கட்கு எதிர்த்தட்டாயிருக்கை ஆகியன ஸ்வரூபத்தால் நிரூபிக்கப்பட்ட தர்மங்களாகும். இது பற்றியே, 'உணர்வின் மூர்த்தி' (3.4.10) என்பதனால் ஞான ஸ்வரூபன் என்று சொல்லப்பட்டது. ஸ்வயம்ப்ரகாச ஞானஸ்வரூபன் என்று வாதிகேசரி சீயர் உரை. ப்ரகாசத்தையே - ஞானத்தையே வடிவாக உடையவன் என்று நம்பிள்ளை. 'நலம் கடல் அமுதம்', 'அக்கரைக்கட்டி', 'அறுசுவை அடிசில்', 'நெய்ச்சுவைத்தேறல்' (3.4.5) முதலான சொற்களால் போக்யமான பொருள்களெல்லாம் ஆனந்தமாயிருக்குமாகையால் ஆனந்தம் சொல்லப்பட்டது. 'அமலன்' என்பதனால் குற்றங்கட்கு எதிர்த்தட்டானவன் என்று சொல்லப்பட்டது. 'அனந்தன்' என்பதனால் ஸ்வரூப, ரூப, குண, விபூதிகளால் அளவிடற்கரியவன்

என்பது சொல்லப்பட்டது. பங்கயக்கண்ணன் (3.4.3) 'ஒளிமணி வண்ணன்' (3.4.8), 'கொண்டல் போல் வண்ணன்' (3.4.11) என்பனவற்றால் வடிவு சொல்லப்பட்டது. கிட்டினாரோடு முதலுறவு பண்ணும் கண் என்று பெரியவாச்சான்பிள்ளை அனுபவிப்பர். அடுத்து, குணங்களுக்கு வாசகமாக 'புகழும் நல் ஒருவன்' (3.4.1) என்றும், 'பாவுசீர்க்கண்ணன்' (3.4.2) என்றும், 'அளிமகிழ்ந்து' என்றும் கூறுவர். வேதம் ஸ்மிருதி முதலானவற்றால் புகழப்பட்ட நன்மையுடையவன் என்று நஞ்சீயர் உரை. வேதங்களாலும், வைதிக புருஷர்களாலும் புகழப்பட்ட விலக்ஷண குணம், திருமேனி, விபூதி ஆகியவற்றோடு கூடியவனான ஒப்பற்றவன் என்று வாதிகேசரி சீயர் அனுபவிப்பார். மேலும் 'கடல் கடைந்து அமுதம் கொண்ட அண்ணல்' என்பதனால் அவனது திருவிளையாடல்களையும், பஞ்சபூதங்கள், பௌதிகங்கள், பளபளப்பான மாணிக்கங்கள், சுவையான பொருள்கள், செவிக்கினிய கானங்கள், வீடுபேறு முதலான புருஷார்த்தங்கள், இவ்வுலகுக்கு மூக்யரான ப்ரஹ்மா முதலானோர் இவற்றுக்கெல்லாம் காரணமான மூலப்பகுதியும் புருஷனும் ஆகிய எல்லாப் பொருள்களும் தான் என்னும்படி ப்ரகாரமாக இருக்கிற ப்ரகாரியைக் காட்டினான். ஆனால் 'தோய்விலன்' என்கிறபடியே இவற்றின் தோஷங்கள் தம்மிடம் ஒட்டாதவன். இப்படி எல்லாப்பொருள்களிலும் உள்ளிருந்து நியமிப்பவனான திருவேங்கடவன் காட்டக்கண்ட ஆழ்வார் பெருங்காற்றிலே பழத்தை எடுப்பாரைப்போலே அத்தைச் சொல்லுவேனோ? இத்தைச் சொல்லுவேனோ? என்று அலமருவதாக அநுபவிப்பர் நம்பிள்ளை. இதனால் வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம் என்று தாம் பாரித்தபடி அடிமை செய்ததாகக் கூறுவர். இது தன்னையே, "அவச்சேதம் அற்ற அடிமை செய்ய வேண்டும்படி ஸர்வாத்மபாவத்தைப் புகழ்ந்து' (221) என்று நாயனார் ஒரு சேர அனுபவிப்பது காணலாம்.

அடுத்து, திருவேங்கடவனுடைய நீர்மையில் ஈடுபட்டு அவனுடைய ஸ்வரூப, ரூப, குண, விபூதி விஷயமான திருநாமங்களைச் சொல்லுமவர்களை நித்யசூரிகள் ஆதரிப்பார்கள் என்பதற்குச்சேர 'வார் புனலந்தண்ணருவி வடதிருவேங்கடத்தெந்தை பேர்பல சொல்லி... அமரர் தொழப்படுவாரே' (3.5.8) என்று அனுபவிப்பர். இவ்விடத்தில் பேர்பல என்றது ஒழிவில் காலத்திலும், புகழுநல் ஒருவனிலும் சொன்னபடி. அதாவது ஒழிவில் காலத்தில் 'வானவரீசன்', 'ஈசன் வானவர்' என்றதனால் ஸ்வரூபமும், 'காரெழில் அண்ணல்' 'கருமாணிக்கம்' என்று வடிவும், 'அந்தமில் புகழ்' என்று குணமும், அவ்வாறே புகழும் நல் ஒருவனில் 'வானவராதி என்கோ' என்று ஸ்வரூபமும், 'பங்கயக்கண்ணன்' என்று வடிவும், 'புகழும் நல் ஒருவன்' என்று குணமும் மற்றும் விபூதிகளுமாக பொதுவானதும் பிரிதொன்றுக்கில்லாத சிறப்பாக உள்ள திருநாமங்களைச் சொன்னபடி, இப்படிப்பட்டவர்களை பகவத் ஸந்நிதியிலிருந்து अहमन्नमहमन्नमहम् अहमन्नम् 'அஹமந்நமஹமந்நமஹம் அஹமந்தம்' என்று களித்தாடுவது பாடுவதான நித்ய சூரிகள் இவர்களைக் கொண்டாடுவர் என்கிறார் நம்பிள்ளை. இப்பாசுரம் சொன்ன பதிகத்தில் வேறு அர்ச்சாவதார எம்பெருமான் பற்றிய குறிப்பு இல்லை என்பது அறியற்பாலதாகும்.

திருவேங்கடவனிடம் அளவிலா பக்தி பூண்ட ஆழ்வார் அவனை ஒழிய வேறு சிலரைக் கவி பாட மாட்டேன் என்பதற்குச்சேர, '...என்னாவிலின் கவி யானொருவர்க்கும் கொடுக்கிலேன் தென்னா தென்னா வென்று வண்டுமுரல் திருவேங்கடத்து என்னானை என்னப்பன் எம்பெருமான் உளனாகவே' (3.9.1) என்று பாசுரமிடுகிறார். இவ்விடத்தில் 'திருவேங்கடத்து' என்பதனால் சுலபன் என்றும், 'என் ஆனை' என்பதனால் கவி பாடுகைக்கு விஷயம் அவனே என்றும்,

'என்னப்பன்' என்று உதவியாளன் என்றும் 'எம்பெருமான்' என்று கெடுதல் செய்தாலும் விடமுடியாத உரிமையுடையவன் என்றும், 'உளனாக' என்று ஆழ்வார் வாயால் ஒரு சொல் கேளாத போது தான் உளனாகாதவனாயிருக்கையால் வத்ஸலன் என்றும் இன்சுவையே வடிவெடுத்தாற்போலே உரைப்பர் பெரியவாச்சான்பிள்ளை. ஆழ்வார் 'திருவேங்கடத்து என் ஆனை' என்கிறார். ஆனை பெறக்கவிபாடுமவர் காணும் ஆழ்வார். இவர் கவி பாடி ஸம்பாதித்த யானையாயிற்று திருவேங்கடவன் என்பர் நம் பிள்ளை.

திருவேங்கடவனைத் தவிர மற்றொருவரைக் கவி பாட மாட்டேன் என்ற ஆழ்வாருக்கு பர்யங்க வித்யையில் சொல்லுகிறபடியே பெரிய பிராட்டியாரும் தானுமாய் நித்யசூரிகள் ஓலக்கம் கொடுக்க விண்ணாட்டையும் மண்ணாட்டையும் ஆளுகிற இருப்பெல்லாம் தோற்ற எழுந்தருளியிருக்கிற இருப்பைக்காட்ட, இந்தச் செல்வமெல்லாம் ஒன்றாய்த் தலைக்கட்ட ஆழ்வார் வாயாலே ஒரு சொல்லுச் சொல்ல வேண்டி இவர் திருக்கையிலே தாளத்தைக் கொடுக்க, ஆழ்வாரும் அவ்விருப்புக்கு 'வீற்றிருந்து' (4.5) என்ற பதிகம் மூலமாக மங்களாசாசனம் செய்கிறார். எம்பெருமானுக்குத் தம் பக்கல் உண்டான சந்தேகம் தீர திருவாய்மொழி பாடுகிற தமக்கு ஒப்பு பரமபதத்திலும் இல்லை என்பதற்குச் சேர, 'நமக்கும் பூவின் மிசை நங்கைக்கும் இன்பன்' (4.5.8). அதாவது இன்று எம்பெருமான் திருவடிகளைப் பற்றின நாமும் பெரிய பிராட்டியுமானால், பெரிய பிராட்டியாரைக் காட்டிலும் தம்மிடம் மிக்க ஆசையுடையவன் என்றபடி, 'நமக்கும்' என்பதற்கு அநாதியான அறியாமை முதலானவற்றின் சேர்த்தியாலே நித்யமாய் இருக்கும் ஸம்ஸாரிகளுக்கும் இவ்வருகான நமக்கும் என்று வாதிகேசரி உரை. ஆழ்வார் தம்மை, 'நீசனேன்நிறை ஒன்றுமிலேன்' என்று ஒழிவில் காலத்தில் சொன்னதை நிரூபிக்கிறார் என்று நம் பிள்ளை உரைப்பர்.

இப்பதிகத்தின் இறுதிப்பாசுரத்தில், 'மாறிமாறாத தண்ணம் மலை வேங்கடத்தண்ணலை...ஆயிரத்து இப்பத்தால் வேரி மாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்குமே' (4.5.11) என்பதற்குச் சேர பிறவியாகிய தீயைக் கொளுத்தி எல்லா மக்களின் தாபங்களை அழிப்பதான குளிர்ந்த திருமலையைத் தனக்கு திவ்யமான இடமான உடையவனான திருவேங்கடமுடையான் தன் அடியார்களிடம் வாத்ஸல்யம் முதலான கல்யாண குணங்களைத் தெரிவிப்பதான இத்திருவாய்மொழி என்பர் பிள்ளான். அதாவது இத்திருவாய்மொழி திருவேங்கடம் வைபவம் என்றபடி. அந்த வகையில், இப்பதிக அவதாரிகையில் கூறியபடி பரமபதநாதனையன்றோ கவி பாடிற்று என்னில், 'நமக்கும் பூவின் மிசை' என்ற பாசுரத்தில் 'நமக்கும்' என்று நித்யானபாயினியான பெரியபிராட்டிக்கும் முன்பாக நித்ய ஸம்ஸாரிகளுக்கு - குறிப்பாக ஆழ்வாருக்கு முகம் கொடுக்கும் சீலகுணம் கண்டு, அதுக்கு எல்லையான திருவேங்கடவனைக் கவி பாடிற்று என்பர் நம் பிள்ளை. மேலும், ஆழ்வார் பராங்குச நாயகியாக திருவிருத்தத்தில் 'விண்முதல் நாயகன் நீண்முடி வெண்முத்து வாசிகைத்தாய் மண்முதல் சேர்வுற்று அருவி செய்யாநிற்கும் மாமலை' என்கிறபடியே பரமபதத்துக்கும் பிரதான நாயகனானவனுடைய திருவபிஷேகத்தில் வெளுத்த முத்து வாசிகை போலே பூமி பிரதேசமான மலையடியிலே சேரும்படியான அருவி சோருகிற பெரிய திருமலை என்பர். இப்பதிகத்தில் வேறு அர்ச்சாவதார எம்பெருமான் பற்றிய குறிப்பு இல்லை என்பது அறியற்பாலதாகும்.

அடுத்து, எம்பெருமான் திறத்துத் தனக்குப் பிறந்த அதிகமான ஆசையாலே ஆழ்வார் பராங்குச நாயகியாய் வழியல்லாத வழியேயாகிலும் அவனோடு கலக்க எண்ணுகிறாள். 'மாசறுசோதி' (5.3) என்ற பதிகத்தில் தோழியிடம் எம்பெருமான் 'கடியன் கொடியன் நெடியமால் உலகம் கொண்ட அடியன்' (5.3.5) என்று அவனுடைய குணத்தில் குறையச் சொல்லி, 'ஆகிலும் அவனன்றே கிடக்கும்' என்கிறாள். இவ்விடத்தில் ஆழ்வார் திருவுள்ளத்தில் திருவேங்கடவன் நினைவை எடுத்துக்காட்டுகிறார் நம்பிள்ளை. அதாவது எம்பெருமான் தனக்கு ஒரு கார்யம் உண்டானால் எதிரே உள்ளவர் அளவு பாராமல் மேல் விழுந்து கலக்குமவன்; அதுமட்டுமின்றி பிரியேன் என்று சொல்லமாட்டான். அவன் யார் என்றால் நெடியமால் என்கிறாள். மால்-பெருமை. அதன் மிகுதியைச் சொல்லுகிறது நெடுமை என்ற சொல். அதனால் அறப்பெரியவன் என்றும் ஆழ்வார் வசமிருந்தும் அளவிடமுடியாதபடியிருக்குமவன் என்றும் உரைப்பர். திருவிருத்தத்தில் (8) பராங்குச நாயகி வைஷ்ணவர்களைத் தலைமகனாகச் சொல்லுகிற 'காண்கின்றனகளும்' என்ற பாசுரத்தில், திருமலையை விரும்பிப் போகிற வைஷ்ணவர்களைப் 'போக ஒண்ணாது' என்று தடுக்குமா போலே இங்கும் பிரிய நினைக்கிறான் என்று அறிந்தும் பெரு மதிப்பனாகையாலே தடுக்க முடியாதபடியிருக்கை என்பர் நம்பிள்ளை. ஏனென்றால், 'வேங்கடத்து உம்பர் நம்பும் சேண குன்றம் சென்று பொருள்...' என்கிறபடியே நித்யசூரிகள் விரும்பும் உயர்ந்த சிகரத்தையுடைய திருமலைக்குச் சென்று அழியாப் பொருளான எம்பெருமானைப் பெறுவது உறுதியாக நிச்சயிக்கப்பட்டது என்கிறார். இதனால் பராங்குச நம்பி மனதில் திருவேங்கடவன் நினைவை எடுத்துக் காட்டுகிறார். இப்பதிகத்தில் வேறு அர்ச்சாவதார எம்பெருமான் பற்றிய குறிப்பு இல்லை என்பது அறியற்பாலதாகும்.

இப்படி ஆழ்வார் எம்பெருமானை நினைத்து ஆற்றாமையாலே மோகிக்க, இவளுடைய தாயார் இவளது நிலைமையைச் சொல்லுகிறாள் 'மாலுக்கு (6.6) என்ற பதிகத்தில், இதில் 'கட்டெழில் சோலை நல் வேங்கடவாணனை' (6.6.11) என்ற பாசுரத்தில், 'வேங்கடவாணனை சடகோபன் சொல் ஆயிரத்து' என்று கொண்டு கூட்டி ஆழ்வார் திருவேங்கடவனையாயிற்று கவி பாடிற்று என்றும், 'திருவேங்கடத்தென்னானை என்னப்பன் எம்பெருமான் உளனாக என் நாவின்கவி யானொருவர்க்கும் கொடுக்கிலேன்' என்று ஆழ்வார் நினைவைக்கூட்டி உரைப்பர் நம்பிள்ளை. அங்ஙனன்றிக்கே 'ஒன்றியாக்கைப்புகாமை உய்யக்கொள்வான் நின்ற வேங்கடம்' அன்றோ என்பர் நம்பிள்ளை. அதாவது திருமலை அடையப்படும் இடமோ என்னில் பகுத்து அறியாதபடி அறிவற்ற பொருளோடே சேர்ந்தவனாய் தேவர் முதலான சரீரம் புகுதல்இல்லாதபடி உய்விக்கைக்காக அவஸரப்ரதீக்ஷனாய் நிற்கிற திருமலை என்கிறார். இப்பதிகத்தில் வேறு அர்ச்சாவதார எம்பெருமான் பற்றிய குறிப்பு இல்லை என்பது அறியற்பாலதாகும்.

ஆழ்வார் தமக்குப் பிறந்த அதிகமான ஆசையாலே புருஷார்த்தத்தின் சிறப்பு காரணமாக துக்கம் பிறந்து கூப்பிட்டவர், அப்புருஷார்த்தத்தைப் பெற திருவேங்கடவன் திருவடிகளில் ஸக்ரம முறையான, ஸமக்ர-முழுமையான சரணாகதி செய்கிறார் உலகமுண்ட பெருவாயனில் (6.10). 'உலகமுண்ட' என்ற முதல் பாசுரத்தில் 'கூடுமாறு கூறாயே' என்று ஆழ்வாரது ஏக்க நினைவை நெஞ்சில் கொண்ட உலகத்தை, உண்ட பெருவாயை, உலப்பில் கீர்த்தியை... என்று ஆழ்வார் எப்படியெல்லாம் நினைந்து உள்ளம் உருகி ஏங்கியிருப்பார் என்பதை ஆசாரியார்கள் தெளிவாக அறிந்து இன்சுவை மிக்க உரை வழங்கியுள்ளனர்.

உலகம் என்ற அடிப்படையில் -

பிரளய ஆபத்திலேயோ காப்பாற்றுவது? உன்னைப்பிரிந்து

ஆபத்திலிருக்கும் என்னைக் காப்பாற்றலாகாதோ?

உலகமெல்லாம் ஈடுபடிலோ காப்பாற்றுவது? அது என்

ஒருவனுக்கே உண்டானால் காப்பாற்றலாகாதோ?

துக்கத்தை அரியாதாரையோ காப்பாற்றுவது? உன்னை

ஆசைப்பட்டாரைக் காப்பாற்றலாகாதோ?

உண்ட-வயிற்றிலே வைத்தோ உலகைக் காப்பாற்றுவது?

உன் வடிவைக்காட்டி என்னைக்காப்பாற்றலாகாதோ?

பெரு - உனது அதிகமான ஆசைக்கு இலக்காதவரையோ

காப்பாற்றுவது? உன் பக்கல் அதிகமான

ஆசையுடையாரைக் காப்பாற்றலாகாதோ?

வாய் - வாயாலேயோ காப்பாற்றுவது? வார்த்தையாலே

என்னைக் காப்பாற்றலாகாதோ?

உலப்பில் கீர்த்தி - எல்லையற்ற குணங்களை அழிய மாறியோ

காப்பாற்றுவது? அந்தக் குணங்களை அனுபவிக்கும்படி

செய்து என்னைக் காப்பாற்றலாகாதோ?

அம்மானே - உறவு (தலைவன்-அடியவன்) அறியாத

உலகையோ காப்பாற்றுவது? உறவறிந்த விஷயத்தை

அறிந்த என்னைக் காப்பாற்றலாகாதோ?

நிலவும் சுடர் சூழ் ஒளி மூர்த்தி - உன் வடிவின் பெருமை

அறியாதாரையோ காப்பாற்றுவது? வடிவின் பெருமை

அறிந்தாரைக் காப்பாற்றலாகாதோ?

நெடியாய் - உன் பெருமை உணராதாரையோ காப்பாற்றுவது?

உன் பெருமை உணர்ந்த என்னைக் காப்பாற்றலாகாதோ?

அடியேனாருயிரே - உன்னைப் பாராத போது தரிப்பாரையோ

காப்பாற்றுவது? உன்னைப்பாராத போது தரியாத

என்னைக் காப்பாற்றலாகாதோ?

திலதமுலகுக்காய் நின்ற திருவேங்கடத்தெம்பெருமானே -

கண்டுபற்றுகைக்கு அரிவில்லாதாரையோ

காப்பாற்றுவது? கண்டு பற்றுகைக்கு எளியன் என்று

அறிந்தாரைக் காப்பாற்றலாகாதோ?

குலதொல் அடியேன் - மற்றவர்கட்கு ஆட்பட்டாரையோ

காப்பாற்றுவது? மற்றவர்கட்கு ஆட்படாது உனக்கே

ஆட்பட்ட அடியாரைக் காப்பாற்றலாகாதோ?

உனபாதம் - வேறொன்றை உபாயமாகப்பற்றினாரையோ

காப்பாற்றுவது? வேறொன்றை உபாயமாகக்

கொள்ளாமல் உன்னையே உபாயமாகக் கொள்வாரைக்

காப்பாற்றலாகாதோ?

கூடும் - வேறு பயனைக் கருதுபவர்களையோ காப்பாற்றுவது?

வேறு எந்த பயனையும் விரும்பாது உன்னையே பயனாக

விரும்புவரைக் காப்பாற்றலாகாதோ?

ஆறு - பிரிய நினைப்பாரையோ காப்பாற்றுவது? உன்னுடன்

கூட நினைப்பாரைக் காப்பாற்றலகாதோ?

கூறாயே - பெரிய தொழில்களைச் செய்தோ காப்பாற்றுவது?

மாசுச: (வருந்தாதே) என்று கூறிக்காப்பாற்றவாகாதோ?

என்று பாட்டிலுள்ள சொற்களின் பின்னணியில் ஆழ்வார் மனத்தே எழுந்த அலமாப்பைத் தொகுத்துக்காட்டுவர்.

இப்படி துக்கம் மேலிட்டுக்கூப்பிட்ட ஆழ்வார் இரண்டாவது பாசுரம் (கூறாய்...) முதல் ஒன்பதாவது பாசுரம் (வந்தாய்...) வரை திருவேங்கடவனது அஸாதாரண குணப்பெருமைகளை - எல்லா விரோதிகளைப் போக்குவதில் ஒளியையுடைய பரிகரத்தையுடையவன்; மேகம் போன்ற வடிவையுடையவன், வியப்பை உண்டுபண்ணும் குணப்பெருமையையுடையவன்; இவற்றை அனுபவிக்கமாட்டாது நெஞ்சிலே புகுந்து தித்திக்கும் அமுதாயிருப்பவன்; உலகவிரோதிக்கு தீங்கை விளைவிக்கும் ஸ்ரீமத்தை - பிராட்டியோடு கூடியிருக்கும் தன்மையை உடையவன்; எல்லாக்காலத்திலும் இமையோர்கள் இனமினமாய் வந்து வணங்கி சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் அடிமை செய்யும்படியாகத் திருமலையிலிருப்பவன்; எல்லையற்ற அவயவசோபையையுடையவன்; என்று பலபடியாக அனுபவித்து 'அகலகில்லேன் இறையும்' (6.10.10) என்று பற்றுவதற்குத் தகுதியான பிராட்டியோடு கூடிய தன்மையும் குணப்பெருமையுமுடைய திருவேங்கடவனின் பூவார் கழல்களில் முறைப்படி பூர்ண சரணாகதி செய்கிறார். திருமலையில் விளங்குகிற குணத்தை மண்ணோர் விண்ணோர் வைப்பில் போகின்ற ஏழுலகுக்கு உயிர் பாசம் வைத்த நிகரில் வாத்ஸல்யம் உஜ்ஜ்வலம் (ஆ.இ. 160) என்பர் நாயனார். (ரகஸ்யத்ரயமும் திருவேங்கடவனும் என்ற கட்டுரை மூலம் இப்பதிகள் தனியாக விளக்கப்படும்.)

திருவேங்கடவன் திருவடிகளிலே ஆழ்வார் சரணம் புகுந்தார். எம்பெருமானும் இவரைக் கொண்டு ஒரு கார்யம் கொள்ளவேணும் என்று எண்ணி இவரது திருமேனி சரம

திருமேனியாகையாலே, ஆழ்வார் சரணாகதி செய்திருந்தாலும், இவரது திருமேனியில் தனக்குள்ள ஆசை கொண்டு கார்யம் செய்யவில்லை. இராமாயணத்தில் வானரங்கள் யாவும் அரக்கர்கள் வாயிலே கிடந்து பெருமாளான இராமனை சரணம் புகுந்தாப்போலே, ஆழ்வாரும் 'உண்ணிலாவிய' (7.1) மனத்தை நலியும் ஐவரான இந்திரியங்களுக்கும் பயப்பட்டு கூப்பிடுகிறார். 'ஆழ்வார் திருமலையிலே புகுந்து கிட்டி நின்றது பேற்றுக்கு உடலாகை தவிர்ந்து கூப்பிடுகைக்கு உடலாயிற்று' என்பர் நம்பிள்ளை. இதுபற்றியே 'உண்ணிலாவிய ஐவரால் குமைதீற்றி என்னையுன் பாதபங்கயம் நண்ணிலா வகையே நலிவான் இன்னம் எண்ணுகின்றாய்' (7.1.1) என்ற தொடரில் 'உன்பாதபங்கயம்' என்பதற்கு 'தாவி வையம் கொண்ட தடந்தாமரைகள்' என்றும் 'பூவார்கழல்கள்' என்றும் சொல்லுகிற திருவடிகளைச் சொன்னது திருவேங்கடவன் திருவடிகளிலே ஆழ்வாருக்கு நோக்கு என்பதை நம்பிள்ளை காட்டுவது அறியற்பாலதாகும்.

எம்பெருமானோடு கலந்து பிரிந்த பராங்குச நாயகியும் அவன் வரக்காணாமையாலே 'நங்கள்வரிவளை... வெங்கண்பறவையின் பாகன் எங்கோன் வேங்கடவாணனை வேண்டிச்சென்றே' (8.2.1) என்று திருவேங்கடவனிடம் ஆசைப்பட்டு பாசுரமிடுகிறாள். இவ்விடத்தில் கடூரமான பார்வையால் எரிக்கப்பட்ட பகைவரையுடைய பெரிய திருவடியை வாகனமாக உடைய திருவேங்கடமுடையானை ஆசைப்பட்டு 'சங்கம் சரிந்தன சாயிழந்தேன் தடமுலைபொன்னிறமாய்த் தளர்ந்தேன்' என்று பராங்குச நாயகி நினைவை எடுத்துரைப்பர் பிள்ளான். ஆழ்வார் ஆசைப்பட்டபடி அவன்தான் வரக்கண்டிருக்கையன்றிக்கே அவனிருந்த தேசத்தளவும் சென்று விரும்பியது பெறாமையால் 'சங்கம் சரிந்தன; ஒளி இழந்தேன்; பூர்ணமான முலைகளும் விரஹ தாபத்தால் பயலை பெற்று நானும் தளர்ந்தேன்' என்று ஏங்குவதாக நஞ்சீயர் உரைப்பர். பால் காய்ச்ச காய்ச்ச வற்றுமா போலே பராங்குச நாயகியின் இருப்பு என்பர். இவ்விடத்தில் அடியார்களின் விரோதிகளை அழியச்செய்யும் வெவ்விய பார்வையுடைய பெரிய திருவடியை நடத்தும் நிர்வாஹகன் திருவேங்கடவன் என்பர் வாதிகேசரி சீயர். கோபியர்களோடு கூடியிருந்த கண்ணனை அழைத்துச் செல்ல வந்த அக்ரூரரை 'அக்ரூர: க்ரூரஹ்ருதய:' என்கிறபடியே கொடிய இதயம் படைத்தவர் என்று கோபியர்கள் சொன்னதுபோல பராங்குச நாயகியும் பெரிய திருவடியைக் கலவியில் எம்பெருமானைப் பிரித்துக்கொண்டு போகுமவன் என்பது தோற்ற 'வெங்கண்பறவை' என்றதாகக் கூறுவர் நம்பிள்ளை. இடத்துக்கு ஏற்ப பெருமை பற்றி நாயகி 'வெங்கண் பறவை' என்றதாக உரைப்பர் நஞ்சீயர்.

அடுத்து, எம்பெருமான், தன்னுடைய இயற்கையான உறவைக்காட்டி தான் நாராயணன் என்றும் எல்லா சக்தியோடு கூடியவன் என்றும் ஆழ்வாருடைய எல்லா விருப்பங்களையும் தலைக்கட்டுவதாகக் கூறுகிறான். ஓராயிரம் என்ற பதிகத்தில் தன்னைக்காண்கைக்குப் பரமபதத்துக்குப் போக வேண்டாதபடி திருமலையிலேவந்து நின்றபடியை நினைத்து ஆழ்வார் தம் சக்தி குறைவாலே தமக்குத் திருமலைக்கும் பரமபதத்துக்கும் வாசியில்லை என்கிறார். இது பற்றியே, 'இன்றிப்போக...தொழுவார்களே' (9.3.8) என்று பாசுரமிடுகிறார். திருமலையானது தன்னை அடைந்தவர்களுடைய புண்யபாபமான கர்மங்களை மீதியில்லாமல் போக்கி, பின்பு சரீரத்தில் ஸம்பந்தமில்லாதபடி பண்ணிக் காத்தருளும் தன்மையனான திருவேங்கடவன் நின்றருளும் இடம் என்றும், அவன் ஸம்பந்தத்தால் அது உயர்ந்த பூமியானது என்றும்,

அவ்வளவும் போய் தொழுமவர்கள் பாக்கியவான்கள் என்பர் பிள்ளான். அன்பின் மிகுதியால் குருடரானவர்கள் கால்நடை தந்து போக முடியாது என்று ஆழ்வார் நினைவை உரைப்பர் நம்பிள்ளை.

எம்பெருமான் ஆழ்வாரைப் பரமபதத்துக்குக் கொண்டு போக விரைகையில், ஆழ்வார் பக்திக்குப்பற்றுக்கோடான திருமந்திரத்தை உலகுக்கு உபதேசிக்க 'கண்ணன் கழலினை' (10.5) என்ற பதிகத்தில் ஒருப்படுகிறார். இதில் பக்திக்குப்பற்றுக்கோடான திருநாமத்தைச் சொல்லி, இதில் இழிந்தார்க்கு அனுஸந்திக்கும் மந்திரம் இன்னது என்று சொல்லி, சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் அவனை அடையுங்கோள் என்பதற்குச்சேர 'மேயான் வேங்கடம் காயாமலர் வண்ணன் பேயார் முலையுண்ட வாயான் மாதவனே' (10.5.7) என்று பாசுரமிடுகிறார். இவ்விடத்தில் அடியார்க்காக கண்ணனாய் வந்து திருவவதாரம் செய்து விரோதியை அழித்தவனாய், சிரமத்தைப் போக்கும் நிறத்தையுடையனான திருமகள் கேள்வன்

அடியார்க்கு எளியனாகத் திருமலையில் வந்து நின்றான், அவனை அடையுங்கோள் என்று உரைப்பர் நஞ்சீயர். அவனது வடிவழகைச் சொல்லும்பேது 'காயாமலர்வண்ணன்' என்கிற படியே துரும்பும் எழுந்தாடும்படி அடிமையிலே மீண்டல்லது நிற்கமுடியாத வடிவு படைத்தவன் என்பர் நம்பிள்ளை. இப்பாசுரத்தில், 'மாதவன் வேங்கடம் மேயான்' என்று கொண்டு கூட்டி, 'ஸ்வாமி புஷ்கரிணீ தீரே ரமயா ஸஹ மோததே' (ஸ்வாமி புஷ்கரிணீ கரையில் பிராட்டியோடு கூடிகளிக்கிறான்) என்கிறபடியே அலர்மேல் மங்கையோடே திருமலையில் நித்யவாசம் பண்ணுகிறான் திருவேங்கடவன் என்று அருளுவர் வாதிகேசரி சீயர்.

இவ்வாறு நம்மாழ்வார் திருவேங்கடமுடையானை அனுபவித்து அவா அற்று வீடு பெற்றார்.

இக்கட்டுரையில் அடியேன் சிற்றறிவுக்கு எட்டியவரையில் விண்ணப்பித்துள்ளேன். குற்றம் களைந்து பொறுத்தருள வேண்டுகிறேன்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்